# ஜனவரி – 18 – வெள்ளி

**புனித எமிலி**

**நாங்கள் கேட்டவை, நாங்கள் அறிந்தவை, எம் மூதாதையர் எமக்கு விரித்துரைத்தவை- இவற்றை உரைப்போம்.**
**திபா. 78:3**

## முதல் வாசகம் : எபிரேயர் 4 : 1 – 5, 11

சகோதரர் சகோதரிகளே, கடவுள் தரும் ஓய்வைப் பெறுவது பற்றி அவர் அளித்த வாக்குறுதி இன்னும் நிலைத்திருப்பதால், உங்களுள் எவரேனும் அதை அடையத் தவறிவிடக்கூடாது என எண்ணுகிறேன். இது குறித்து நாம் கவனமாயிருப்போமாக. ஏனெனில் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது போலவே, நமக்கும் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. ஆயினும் அவர்கள் கேட்ட செய்தி அவர்களுக்குப் பயன் அளிக்கவில்லை. ஏனெனில் கேட்டவர்கள் அச்செய்தியை நம்பிக்கையோடு கேட்கவில்லை. இந்த ஓய்வைப் பெறுகிறவர்கள் நம்பிக்கையுடன் இருக்கும் நாமே. இதைக் குறித்தே, ”நான் சினமுற்று, ”நான் அளிக்கும் இளைப்பாற்றியின் நாட்டிற்குள் நுழையவேமாட்டார்கள்” என்று ஆணையிட்டுக் கூறினேன்” என எடுத்துரைக்கப்பட்டுள்ளது. எனினும் உலகம் தோன்றிய காலத்திலேயே கடவுளுடைய வேலைகள் முடிந்து விட்டன. ஏனெனில் மறைநூலில் ஓரிடத்தில் ஏழாம்நாள் பற்றி, ”கடவுள் தாம் செய்த வேலைகள் அனைத்தையும் நிறைவு பெறச் செய்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார்” என்று கூறப்பட்டுள்ளது. மேலும், மேற்சொன்ன சொற்றொடரில், ”அவர்கள் நான் அளிக்கும் இளைப்பாற்றியின் நாட்டிற்குள் நுழையவே மாட்டார்கள்” என்றிருக்கிறது. ஆதலால், கீழ்ப்படியாதவர்களின் மாதிரியைப் பின்பற்றி, எவரும் வீழ்ச்சியுறாதவாறு அந்த ஓய்வைப் பெற முழு முயற்சி செய்வோமாக.

**பதில்பாடல் :** இறைவனின் செயல்களை மறவாதீர்கள்

## நற்செய்தி : மாற்கு 2 : 1 - 12

இயேசு மீண்டும் கப்பர்நாகுமுக்குச் சென்றார். அவர் வீட்டில் இருக்கிறார் என்னும் செய்தி பரவிற்று. பலர் வந்து கூடவே, வீட்டு வாயிலருகிலும் இடமில்லாமல் போயிற்று. அவர் அவர்களுக்கு இறைவார்த்தையை எடுத்துரைத்துக் கொண்டிருந்தார். அப்போது முடக்குவாதமுற்ற ஒருவரை நால்வர் சுமந்து அவரிடம் கொண்டு வந்தனர். மக்கள் திரண்டிருந்த காரணத்தால் அவரை இயேசுவுக்கு முன் கொண்டுவர இயலவில்லை. எனவே அவர் இருந்த இடத்திற்கு மேலே வீட்டின் கூரையை உடைத்துத் திறப்பு உண்டாக்கி, முடக்குவாதமுற்றவரைப் படுக்கையோடு கீழே இறக்கினர். இயேசு அவர்களுடைய நம்பிக்கையைக் கண்டு, முடக்குவாதமுற்றவரிடம், ”மகனே, உன் பாவங்கள் மன்னிக்கப் பட்டன” என்றார். அங்கே அமர்ந்திருந்த மறைநூல் அறிஞர் சிலர், ”இவன் ஏன் இப்படிப் பேசுகிறான்? இவன் கடவுளைப் பழிக்கிறான். கடவுள் ஒருவரே அன்றிப் பாவங்களை மன்னிக்க யாரால் இயலும்?” என உள்ளத்தில் எண்ணிக் கொண்டிருந்தனர். உடனே அவர்கள் தமக்குள் இவ்வாறு எண்ணுவதை இயேசு தம்முள் உணர்ந்து, அவர்களை நோக்கி, ”உங்கள் உள்ளங்களில் இவ்வாறு எண்ணுவது ஏன்? முடக்குவாதமுற்ற இவனிடம் ”உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன” என்பதா? ”எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட, என்பதா? எது எளிது? மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்” என்றார். பின்பு அவர் முடக்குவாதமுற்றவரை நோக்கி, ”நான் உனக்குச் சொல்கிறேன், நீ எழுந்து உன்னுடைய படுக்கையை எடுத்துக் கொண்டு உனது வீட்டுக்குப் போ” என்றார். அவரும் எழுந்து உடனே தம்முடைய படுக்கையை எடுத்துக்கொண்டு எல்லாரும் காண வெளியே சென்றார். இதனால் அனைவரும் மலைத்துப்போய், ”இதைப்போல நாம் ஒருபோதும் கண்டதில்லையே” என்று கூறிக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர்.

**தியானம்:** கப்பர்நாகும் என்னும் ஊரில் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. இயேசுவைத் தேடிமக்கள் பெருங்கூட்டமாக வருகிறார்கள். அப்போது சிலர் முடக்கு வாதத்தால் துன்புற்ற ஒருவரைப் படுக்கையோடு தூக்கி வருகிறார்கள். வீட்டுவாயில் வழியே உள்ளே நுழையமுடியாத அளவு மக்கள் கூட்டம். எனவே, கூரையைப் பிரித்து நோயாளியைப் படுக்கையோடு இயேசுவின் முன்னிலையில் இறக்குகிறார்கள். இவ்வாறு தம்மைத் தேடிவருகின்ற மக்களின் நம்பிக்கையை இயேசு பாராட்டுகின்றார். நோயுற்ற மனிதரைக் குணப்படுத்துகின்றார். இயேசுவிடம் கடவுளின் வல்லமை துலங்கியது என யார் ஏற்றுக் கொண்டார்களோ அவர்களது வாழ்வில் அதிசயங்கள் நிகழ்ந்தன, பிணிகள் அகன்றன, நலம் பிறந்தது. இயேசுவை நம்பியோர் கடவுளையே நம்பினர் அவரிடத்தில் வெளிப்பட்ட கடவுளின் வல்லமையில் நம்பிக்கை கொண்டனர். முடக்குவாத முற்ற மனிதருக்கு இயேசு உடல் நலம் மட்டும் நல்கவில்லை அம்மனிதரின் வாழ்வில் முழுநலனைக் கொணர்ந்தார். உடலும் உள்ளமும் ஆன்மாவும் நலம் பெற்றதால் அம்மனிதர் நோயிலிருந்தும் நோயின் மூல காரணமாகக் கருதப்பட்ட பாவத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டார். கடவுள் மட்டும் தானே பாவத்தை மன்னிக்க முடியும் எனமறைநூல் அறிஞர் கேட்டகேள்விசரியானதுஎன இயேசுஏற்கிறார். அதேசமயத்தில் பாவத்தை மன்னிக்கும் அதிகாரம் தமக்கு உண்டு எனவும் இயேசு அறிக்கையிடுகிறார். இதனால் இயேசு வழியாகக கடவுள் செயலாற்றினார் என்னும் உண்மையை இயேசு இன்றைய நற்செய்தியின் வழியாக நிலைநாட்டினார். நாமும் நம்மிடம் இருக்கிற நேய்களை குணமாக்க மன்றாடுவோம்